**புலத்சிங்ஹல பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**
-----------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 01 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 02 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூலை 15 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தைத் தவிர நிதிக்கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான புலத்சிங்ஹல பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்தியிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கைத்தொழில் கடன்கொடுத்தோர் ஆரம்ப மீதி ரூபா 6,147,841 தொகையான போதிலும் ஆரம்ப கைத்தொழில் கடன்கொடுத்தோர் மீதியாக ரூபா 14,573,213 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஏற்பட்ட தவறை சீராக்குவதற்காக திரண்ட நிதிக்கு ரூபா 8,425,372 தொகை செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 10,345,509 தொகை செலவு வைக்கப்பட்டதன் காரணமாக ரூபா 1,920,137 தொகையால் திரண்ட நிதியம் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2014 நவம்பர் மாதம் இணைந்த படிப்பணத்திற்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 190,000 தொகையான போதிலும் இது ரூபா 65,000 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக பெறவேண்டிய சம்பள மீளளிப்பு மீதி ரூபா 125,000 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 4,650 தொகையான ஊழியர்களின் பிணைச் சான்றிதழ் பெறுமதியும் ரூபா 71,400 தொகையான வங்கிக் கணக்குகளிலான ஊழியர் பிணைப் பெறுமதி பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தமையால் நடைமுறைப் பொறுப்பு ரூபா 76,050 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஈ) சபையின் ஒட்டுமொத்த ஊழியர் பிணை வைப்பு முதலீட்டுப் பெறுமதி ரூபா 79,050 தொகையானதுடன் ஐந்தொகையின் நடைமுறைச் சொத்துக்களின்

கீழ் ஊழியர் பிணை வைப்பு முதலீடாக ரூபா 15,070 தொகையான பெறுமதி மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்ததன் காரணமாக நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 63,980 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கு உரித்தான பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானத் தொகை ரூபா 477,366 ஆக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட முன்னர் இனங்காணப்பட்டிருந்த போதிலும் பெறவேண்டிய நீதிமன்த் தண்டப்பணமாக ரூபா 666,250 தொகை பட்டியலிடப்பட்ட வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக ஆண்டிற்கான நீதிமன்த் தண்டப்பணமாக ரூபா 188,884 தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2014 ஆம் ஆண்டிற்கு உரித்தாக மீளாய்வாண்டின் போதும் 2015 ஆம் ஆண்டின் முதல் காலாண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 6,744,394 தொகையான போதிலும், 2012, 2013 ஆண்டுகளிற்காகப் பெறப்பட்ட ரூபா 4,928,267 தொகையான பணம் மாத்திரம் மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டண வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக ஆண்டிற்கான வருமானம் ரூபா 1,816,127 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) 2014 ஆம் ஆண்டின் வருமானங்கள் கணக்கு வைக்கப்படுகையில் ஆண்டிற்கு உரித்தான வருமானம் முறையாக பட்டியலிடப்பட்டிராததன் காரணமாக ஆண்டின் போது நடப்பாண்டிற்கு உரித்தான பெறுவனவுகளும், பட்டியல் இடப்பட்ட வருமானமும் விஞ்சியதன் காரணமாக பெறவேண்டிய நிலுவை வருமானம் நடப்பாண்டிற்கு உரித்தான வருமானத்திற்கு ஈடுசெய்யப்பட்டிருந்ததன் காரணமாக மீளாய்வாண்டின் வருமானமும் முன்கொண்டு செல்லப்பட்ட நிலுவை வருமானத் தொகையான ரூபா 143,052 தொகையால் குறைத்துக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,672,077 ஆக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 26,077,824 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | -------------------- | ------------- | ------------- | ------------- |
| | | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ |
| (i) | வீதவரியும் வரியும் | 136 | 5 | 131 |
| (ii) | ஏக்கர் வரி | 113 | -- | 112 |
| (iii) | கைத்தொழில் வரி | 74 | 3 | 71 |
| (iv) | வியாபார வரி | 204 | 42 | 162 |
| (v) | குத்தகை வாடகை | 546 | - | 546 |

**2.2.2 வீததவரி**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை வீதவரி மீதி ரூபா 108,072 தொகையானதுடன் இதில் ரூபா 126,109 தொகை கணக்காய்வுத் தினமாகிய 2015 யூன் 15 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 ஏக்கர் வரி**

2011 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே நிலவிவரும் ரூபா 83,984 தொகையான ஏக்கர் வரி மீதி கணக்காய்வுத் தினமாகிய 2015 யூன் 15 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 வியாபார அனுமதிப்பத்திரம்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட வியாபார அனுமதிப்பத்திர மீதியான ரூபா 41,456 தொகையில் 28 வியாபாரங்களிற்கு உரித்தான ரூபா 23,825 தொகை கணக்காய்வுத் தினமாகிய 2015 யூன் 15 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படவில்லை.

**2.2.5 வியாபார வரி**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 51 வியாபார நிலையங்களில் இருந்து ரூபா 30,720 தொகையான வியாபார வரி நிலுவையாகக் காணப்பட்டதுடன் கணக்காய்வுத் தினமாகிய 2015 யூன் 15 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படவில்லை.

**2.2.6 கைத்தொழில் வரி**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 32,350 தொகையான கைத்தொழில் வரி மீதியில் ரூபா 5,500 தொகை கணக்காய்வுத் தினமாகிய 2015 யூன் 15 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.7 வியாபாரப் பெயர் பலகைக் கட்டணம்

2014 ஆம் ஆண்டிற்கான வியாபாரப் பெயர்ப் பலகைக் கட்டணமாக ரூபா 75,000 தொகை மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக எந்த வருமானமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. வருமான நிர்வாகிகளின் எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்படுகையில் இது தொடர்பாக எவ்வித திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.8 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 666,250 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 4,928,267 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறமையீனங்கள்

### 3.1.1 தற்காலிக குடியிருப்பாளர்களுக்காக நிலையான குடியிருப்பை வழங்குதல்

புலத்சிங்ஹல பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் ஏகல்ஒய ராஜாலிமானான வீதிக்கு அருகாமையில் 2 ½ ஏக்கர் அளவிலான ஓர் காணியில் 70 குடும்பங்கள் தற்காலிகமாகக் குடியிருக்கின்றனர். அவர்களுக்கு நிரந்தரக் குடியிருப்பை வழங்கி சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றைச் செயற்படுத்துவதற்கு அக் குடியிருப்பாளரான திரீ ஏதர் பண்ணை உரிமையாளர் 2012 திசெம்பர் 14 ஆம் திகதி உடன்பாட்டைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக சட்ட ரீதியான ஆவணங்களைத் தயாரித்து செயற்பாட்டுத் திட்டம் தொடர்பான ஆலோசனைகள் கோரப்பட்டு உள்ளூராட்சி உதவி ஆணையாளரிற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.
1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 108(ஏ) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி, உரிய நிறுவகத்திடம் இருந்து வரைபடமும் உறுதியின் மூலமும் காணியைப் பெற்று அதனை மீளப் பிரித்து வரைபடங்களைத் தயாரித்து வேறான உறுதி தயாரிக்கப்படுவதற்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் 2012 திசெம்பர் 30 ஆம் திகதி அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. 2014 செப்தெம்பர் 12 ஆம் திகதி மாதாந்த பொதுக் கூட்டத்தில் புலத்சிங்ஹல பிரதேச சபைக்கு பரிசாக காணியைப் பொறுப்பேற்பதற்கு உடன்பாடு செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2014 ஒக்டோபர் 27 ஆம் திகதி பண்ணை உரிமையாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2015 யூன் 19 ஆம் திகதி கணக்காய்வுத் தினம் வரை இக் காணி கூறாக்கப்பட்டு உரிய குடும்பங்களுக்கு ஒப்படைக்கப்படுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.1.2 சிக்கனமற்ற செயற்பாடுகள்**

(அ) வருமானம் உழைக்கப்படும் நோக்கில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வாகன மற்றும் சேவைப் பராமரிப்புப் பிரிவின் எதிர்பார்க்கப்பட்ட வருமானம் ரூபா 1,000,000 தொகையான போதிலும், ஆண்டின் போது எவ்வித வருமானமும் உழைக்கப்பட்டிருக்கவில்லை. நிர்மாணிப்புப் பொருட்கள் வழங்கப்பட்டு சம்பளத்திற்காக உறப்பட்ட அடிப்படைக் கிரயமான ரூபா 267,275 தொகையை ஈடுசெய்வதற்கு இச் செயற்திட்டம் தவறியிருந்ததுடன் கிரய நலனை ஒப்பிடுகையில் ஆக்கபூர்வமாகச் செயற்பட்டிராமை கண்டறியப்பட்டது.

(ஆ) பொல்கொட தகனக்கிரிகைகள் இடம் பெறும் இடத்திற்கு உரித்தான காணியில் உள்ள 02 பலா மரங்களும், 01 மா மரமும், 03 தென்னை மரங்களும் 2014 செப்தெம்பர் 26 – 29 ஆம் திகதிகளில் வெட்டி அகற்றப்பட்டிருந்ததுடன் 2015 யூன் 19 ஆம் திகதி கணக்காய்வுத் தினம் வரை அம் மரங்கள் பொல்கொட நூலக வளாகத்தில் சிதறுண்டு காணப்பட்டதன் காரணமாக அம் மரங்களுக்கான பொருளாதாரப் பெறுமதி ஒன்று சபைக்குப் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.1.3 கைவிரலடையாள இயந்திரம் செயற்படாத நிலையில் காணப்பட்டமை**

கைவிரலடையாள இயந்திரம் 2013 ஏப்ரல் 19 ஆம் திகதி செயலிழந்து பழுதுபார்க்கப்படுவதற்காக 2013 நவம்பர் 03 ஆம் திகதி தனியார் நிறுவகம் ஒன்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. பழுதுபார்த்தல் செலவினமான ரூபா 54,264 தொகை 2014 திசெம்பர் 15 ஆம் திகதி செலவிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2015 யூன் 22 ஆம் திகதி வரை கைவிரலடையாள இயந்திரம் சபையில் பொருத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.1.4 ஊழியர் கடன்**

சேவையை விட்டுச் சென்ற, ஓய்வுபெற்ற மற்றும் மரணித்தல் போன்ற காரணங்களால் 4 ஊழியர்களிடமிருந்து 2011 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 166,664 தொகையான ஊழியர் கடன் மீதி 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் அறவிடப்படாதிருந்தது.

**3.2 ஒப்பந்த கட்டுப்பாடு**

**பிரதேச சபை அலுவலகக் கட்டிட நிர்மாணிப்பு**

மாகாண எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 20.5 மில்லியன் தொகையான மதிப்பீட்டுப் பெறுமதியுடன் அங்கீகரிக்கப்பட்டிருந்த பிரதேச சபை புதிய அலுவலகக் கட்டிட நிர்மாணிப்பு ஒப்பந்தம் தனியார் நிறுவகம் ஒன்றிற்கு ரூபா 16,039,888 இற்கு வழங்கப்பட்டிருந்தது. 2015 யூன் 22 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தூண்களும் சுவர்களும் பொருந்தும் இடங்களில் செங்குத்து வெடிப்பு அடையாளங்களைக் காணக்கூடியதாக இருந்தது. இவ் வெடிப்பு அடையாளங்கள் கீழ் மாடியில் சிறிதளவாகவும் முதலாம் மாடியில் பெருமளவிலும் (பொட்டி இடப்பட்டு பூச்சிடப்பட்டு வெளிப்பகுதி) காணப்பட்டது.

(ஆ) யன்னல்களினதும் தூண்களினதும் கீழ் இரு மூலைகளிலும் ஆரம்பித்துள்ள வெடிப்பு அடையாளங்கள் காணப்பட்டதுடன் படிகளுக்கு அருகாமையில் தளப்பகுதி மற்றும் சுவர் பொருந்தும் பகுதியில் செங்குத்தாக வெடிப்பு அடையாளத்தைக் காணக்கூடியதாக இருந்தது.

(இ) கீழ் மாடியில் யன்னல் வழியாக மழை நீர் உள்ளே வரும் நிலை காணப்பட்டதுடன் மழை நீர் வராதிருப்பதற்கான காப்பு ஒன்று இடுவதற்கான தேவைப்பாடு காணப்பட்டது.

## 3.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) 2014 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீட்டின் படி, சபையின் பாதீடு ஒட்டுமொத்த மீண்டெழும் வருமானம் ரூபா 94,464,045 தொகையான போதிலும், உள்ளபடியான வருமானம் ரூபா 16,771,377 தொகையாகக் காணப்பட்டமையால் பாதீட்டு வருமானத்தில் 17 சதவீதமான இலக்கு மாத்திரம் அடையப்பெற்றிருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீட்டின் படி, 56 பாதீட்டு விடயங்களுக்காக ரூபா 9,769,000 கூட்டுத்தொகையான பணம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதியில் இதில் எந்தவித தொகையும் செலவிடப்பட்டிருக்கவில்லை. இதன் படி, பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு செயற்பாட்டிற்காகப் பயன்படுத்தப்பட்டிராமை கண்டறியப்பட்டது.

(இ) உரிய செயற்பாடு மேற்கொள்ளப்படாததன் காரணமாக ரூபா 4,257,500 தொகையான ஒதுக்கப்பட்ட ஏற்பாடு முற்றாக சேமிக்கப்பட்டிருந்த செலவினத் தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்ட தொகை வேறு செலவின தலைப்புகளுக்கு மாற்றப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. இதன் படி, ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டதில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் எய்தப்படுவதற்கு செயற்பட்டிராமை கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்டது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) பாதீடிடல்